# மாலைக்கதிர்

Maalaikkathir








சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 29 திங்கட்கிழமை 15.12.2025 கதிர் 409


## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் கைது!



கொழும்பு, டிச. 15

இலங்கைபெற்றோலியக்கூட்டுத தாபனத்தின் முன்னாள் தலைவர் தம்மிக்க ரணதுங்க இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும்ஆணைக்குழுவால்இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

2017-2018 ஆண்டுகளுக்கான எரிபொருள் கொள்முதல் செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த மூன்றுநீண்டகால டெண்டர்களை இரத்துச் செய்து, அதற்குப் பதிலாக அதிக விலைக்கு ஸ்பாட் டெண்டர்களை மேற்கொண்டதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குக்கிட்டத்தட்ட 800 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர்மேலதிகவிசாரணைகளின் பின்னர் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# புதிய அரசாங்கத்தின் கீழ் நாடு வளர்ச்சிப் பாதையில்

## புள்ளியியல் துறை தரவுகளில் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிச. 15

2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5.4 சதவீதம் விரிவடைந்துள்ளது என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

அறிவிப்பின்படி, மூன்றாம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பதிவான 3,154,148 மில்லியனில் இருந்து 3,325,611 மில்லியனாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 5.4 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

விவசாயம், தொழில்துறை மற்றும் சேவைகள் நடவடிக்கைகள் அனைத்தும் முறையே 3.6 சதவீதம், 8.1 சதவீதம் மற்றும் 3.5 சதவீதம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




## பாடசாலைகள் நாளை மீளத் திறப்பு

கொழும்பு, டிச. 15

பாதுகாப்பு முகாம்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் மற்றும் தொடர்ந்தும் அனர்த்த நிலையிலுள்ள பாடசாலைகளைத் தவிர, ஏனைய அனைத்துப்பாடசாலைகளும்நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

நிவாரண முகாம்களில் தற்போது சுமார் 7 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். அவர்களை 2 அல்லது 3 மாதங்களுக்குள் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்

7➤



நாடாளுமன்றத்தில் வரும் வியாழக்கிழமை


## ஆயிரம் பில்லியன் ரூபா நிதி கோரும் குறைநிரப்பு பிரேரணை முன்வைப்பு!

கொழும்பு, டிச. 15

ஆயிரம் பில்லியன் ரூபா நிதி கோரும்குறைநிரப்பு பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும்18 ஆம் திகதி வியாழக கிழமை கூடும் விசேட

7➤



## ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதியுடன் சஜித் சந்திப்பு



கொழும்பு, டிச. 15

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதியை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

டித்வா சூறாவளி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே மேற்படி சந்திப்பு நடந்தது என்று எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை வங்குரோத்து நிலையை எதிர்கொண்டிருந்தது. அவ்வேளை நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்

7➤

# ஊவா மாகாண பாடசாலைகள் இரு கட்டங்களாக திறக்கப்படும்



கொழும்பு, டிசெ.15

'டித்வா' புயலுடன் நாட்டுக்கு ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக மூடப்பட்ட ஊவா மாகாண பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் ரோஹித அமரதாச தெரிவித்தார்.

ஊடக சந்திப்பொன்றில் கருத்து தெரிவித்த அவர், இரண்டு திகதிகளின் கீழ் ஊவா மாகாண பாடசாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அதற்கமைய, கடுமையாக அனர்த்தத்திற்கு உள்ளான பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் நாளை (16) ஆம் திகதியும், பாதிக்கப்பட்ட பாடசாலைகள் எதிர்வரும் 29 ஆம் திகதியும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

"ஊவா மாகாணத்தின் மொனறாகலை மாவட்டத்திலுள்ள 291 பாடசாலைகளில், பிபிலை வலயத்திலுள்ள தெஹிகலவத்தை பாடசாலை தவிர்ந்த ஏனைய 290 பாடசாலைகளையும் நாளை (16) திறக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று, பதுளை மாவட்டத்தின் மஹியங்கனை வலயத்தில் திக்யாய வித்தியாலயம், களுக்கல வித்தியாலயம் மற்றும் பின்னகொல்ல வித்தியாலயம் தவிர்ந்த ஏனைய 78 பாடசாலைகளை நாளை திறக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலவும் அனர்த்த நிலைமையுடன் பதுளை மாவட்டத்தின் ஏனைய வலயங்களான பதுளை வலயம், பண்டாரவளை வலயம், வெலிமடை வலயம், பசறை வலயம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த அனைத்து பாடசாலைகளும் நாளை ஆரம்பிக்கப்பட மாட்டாது என்பதுடன், 29 ஆம் திகதி அந்த வலயங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." என்றார். (ஐ)

# பண்டிகைக் காலம் ஆரம்பமாவதை முன்னிட்டு விசேட பொலிஸ் பாதுகாப்பு!

பண்டிகைக் காலம் ஆரம்பமாவதை முன்னிட்டு நகரங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்டு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ. வுட்லர் தெரிவித்தார்.

இன்றையதினம் (15) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டிகைக் காலம் ஆரம்பமாவதை முன்னிட்டு பொலிஸ் மா அதிபரால் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் விசேட செய்தி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

நகரங்களின் பாதுகாப்பு, மத வழிபாட்டுத் தலங்களின் பாதுகாப்பு மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக மேல் மாகாணத்தில் இந்த அனைத்து பணிகளுக்காகவும் 2,500 மேலதிக படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எனவே, பொதுமக்கள் தங்கள் கார் அல்லது மோட்டார் சைக்கிளை ஏதேனும் ஒரு இடத்தில் நிறுத்தும் போது அது குறித்து அவதானமாக இருக்க வேண்டும்.

அந்த வாகனத்தில் பெறுமதியான பொருட்கள் அல்லது பணத்தை வைத்துவிட்டுச் செல்ல வேண்டாம்.

உங்களுக்கு யாராவது ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டால், அருகில் உள்ள பொலிஸ் அதிகாரிக்கு அதனைத் தெரியப்படுத்துங்கள்.

இந்த பண்டிகைக் காலத்தில் சிவில் உடையில் பல பொலிஸ் உத்தியோகத்தர்களும், புலனாய்வாளர்களும் உங்கள் உதவிக்காகவும் பாதுகாப்புக்காகவும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் முப்படைகளும் உங்களைப் பாதுகாக்கத் தயாராக உள்ளதாக அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விபத்துக்குள்ளான எம்.பி அஷோக ரன்வலவின் வாகனப் பரிசோதனை அறிக்கை!

விபத்துக்குள்ளான நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக ரன்வலவின் வாகனப் பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ. வூட்லர் தெரிவித்துள்ளார்.

அதன்படி அசோக ரன்வல செலுத்திய வாகனத்தின் பிரேக் முறையாகப் பராமரிக்கப்படவில்லை என்றும், பிரேக் அமைப்பில் கோளாறு இருப்பதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் விபத்துக்குள்ளான நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக ரன்வலவின் மருத்துவ அறிக்கை இதுவரை பொலிஸாருக்குக் கிடைக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ. வூட்லர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ அறிக்கை கிடைத்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக ரன்வல தொடர்பில் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# படகுகள் சீரின்மையால் நெடுந்தீவு செல்ல முடியாது அவதிப்படும் மக்கள்





நெடுந்தீவுக்கான படகுகள் சீரின்மையால் வெள்ள நிவாரணம் கொண்டு செல்ல முற்பட்ட அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், மக்கள் பலர் இடைநடுவில் நின்று அவதியுற்ற சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் இன்றையதினம் நெடுந்தீவில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நெடுந்தீவு செல்வதற்காக அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உள்ளிட்ட பொதுமக்கள் பலரும் தயாராகியிருந்தனர்.

இதன்போது அனைவரையும் ஏற்றிச் செல்வதற்காக கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள நெடுந்தாரகை படகு வருகைதந்தது.

படகில் ஏறுவதற்கு நீண்ட வரிசைகளில் அரச அலுவலக உத்தியோகத்தர்கள், வங்கி முகாமையாளர்கள், வைத்தியர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் நிவாரணபணிகளை முன்னெடுப்பவர்கள் என பலரும் காத்திருந்தனர்.

ஆனால் கடற்படையினர் 100 பேர்களை மாத்திரமே படகில் ஏற்ற முடியும் என கூறியுள்ளர். அத்துடன் நெடுந்தீவுக்கான குமுதினிப் படகும் பழுதடைந்துள்ளதாக நெடுந்தீவு பிரதேச செயலர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தினசரி வேலைக்குச் செல்லும் பல அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் படகில் செல்லமுடியாது புறக்கணிக்கப்பட்டனர்.

மக்கள் புறக்கணிக்கப்பட்டமையைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினரும் தனது பயணத்தை இரத்து செய்து யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மற்றும் ஏனைய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் இது தொடர்பாக தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்ட நிலையில் எவ்வித ஆக்கபூர்வமாக பதிலும் கிடைக்கவில்லை.

இறுதியில் நெடுந்தீவு பிரதேச செயலரின் முயற்சியில், இறந்தவரின் உடலைக்கொண்டு செல்லும் தனியார் படகு ஒன்றில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்களைக் கொண்டு செல்ல முயற்சித்தவேளை இறந்த உடலுடன் செல்வதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் குறித்த பயணமும் இரத்தானது.

இறுதியில் நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் படகுக்காக அனைவரும் காத்திருக்கின்றனர். (ஜ)

## 18 நாட்களின் பின்னர் திறக்கப்பட்ட நாவலப்பிட்டி - கண்டி பிரதான வீதி!



கொழும்பு, டிசெ.15

டிட்வா புயலினால் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட நாவலப்பிட்டி - கண்டி பிரதான வீதி 18 நாட்களுக்குப் பிறகு போக்குவரத்திற்காக இன்று திறக்கப்பட்டது.

மண்சரிவு காரணமாக வீதியில் வீழ்ந்திருந்த மண் அகற்றப்பட்டு வீதி சீரமைக்கப்பட்டுள்ளதுடன், வீதிக்கு மேலுள்ள மண்மேடு சரிந்து விழும் அபாயம் காணப்படுவதால், அதற்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் வரை போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பாதுகாப்பாக வீதி அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடத்தில் பணிகள் நிறைவடையும் வரை அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை, சாரதிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன் இவ்வீதியில் கனரக வாகனப் போக்குவரத்திற்கும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வீதியைத் திருத்தும் பணிகள், இராணுவத்தின் 6 ஆவது பொறியியல் படைப்பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நாவலப்பிட்டி மற்றும் எத்கல பொலிஸ் நிலையங்கள், பஸ்பாகே கோரல பிரதேச சபை உள்ளிட்ட பல தரப்பினரின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்பட்டன.

வீதியைத் திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் துஷாரி ஜயசிங்க, பஸ்பாகே கோரல பிரதேசத்திற்குள் அனர்த்தத்திற்கு உள்ளான பெரும்பாலான வீதிகள் தற்போது திருத்தப்பட்டு நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் உலப்பனை - கண்டி வீதியின் புனரமைப்புப் பணிகளை இன்னும் ஒரு வாரத்தில் நிறைவு செய்து போக்குவரத்திற்காகத் திறக்க எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

## அனர்த்தங்களை முன்கூட்டியே கணிக்க அதிரடி திட்டம்! இலங்கையில் புதிய முயற்சி



அதிநவீன புவியியல் தகவல் அமைப்புகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அனர்த்தங்களைக் கணித்தல், தயாராகுதல் மற்றும் பதிலளிக்கும் திறனை வலுப்படுத்தும் நோக்கில்“புநழுயுஐ கழுச னுளையளவநச சுநளடைநைஉந” என்ற தேசிய முயற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நிபுணர்கள் சங்கத்தினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுமைகளைத் தழுவி, மனித வளத்தில் முதலீடு செய்து, புநழுயுஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அபாயத்தை ஆயத்தமாக மாற்றுவதன் மூலம் அனர்த்தங்களைத் தாங்கும் திறன் இலங்கைக்கு ஏற்படும் என அமெரிக்க தூதரகத்தின் பிரதித் தலைமை அதிகாரி ஜேன் ஏ.ஹொவெல தெரிவித்துள்ளார்.

அத்துடன், செயற்கை நுண்ணறிவு, தரவு நிர்வாகம் மற்றும் டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பு ஆகியவை தற்போது மக்களின் வாழ்வாதாரங்கள் மற்றும் தேசிய ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் பிரதி செயலாளர் வருணஸ்ரீ தனபால தெரிவித்துள்ளார. (ஜ)

## இலங்கைக்கு கடத்தவிருந்த 150 கிலோ கஞ்சா பறிமுதல்! இருவர் கைது

*ராமநாதபுரம்மாவட்டம்தேவிபட்டினம் அடுத்த முள்ளிமுனை மீன்பிடி துறைமுகத்திலிருந்து நாட்டுப்படகில் இலங்கைக்கு கடத்துவதற்காக கடற்கரையில்பதுக்கிவைக்கப்பட்டிருந்த 25 லட்சம்ரூபா மதிப்பிலான 150 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.*

*அத்துனட மரைன் பொலிசார் இருவரை கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.*

*முள்ளிமுனை கடற்கரையிலிருந்து நாட்டுப்படகில் இலங்கைக்கு கஞ்சா கடத்த இருப்பதாக தேவிப்பட்டினம் மரைன் பொலிசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று இரவு கடற்கரை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.*

*அப்போது மரைன் பொலிசாரை கண்டதும் அங்கிருந்து இருவர் தப்பி சென்ற நிலையில் அந்த பகுதியை சுற்றி வளைத்து பொலிசார் தீவிரமாக தேடினர். அப்போது இலங்கைக்கு கடத்துவதற்காக சாக்கு மூட்டையில் பொட்டலங்களில் கஞ்சா இருந்தது தெரியவந்தது.*

*கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்ரபடுத்தி சிறையில் அடைப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.* (ஜ)

# ராகுல் குறித்து சோனியாவிடம் புகார் அளித்த முன்னாள் எம்எல்ஏ காங்கிரஸில் இருந்து நீக்கம்




புவனேஸ்வர்: ராகுல் குறித்து சோனியாவிடம் கடிதம் மூலம் புகார் அளித்த ஒடிசாவைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏவை கட்சியில் இருந்து நீக்கம் செய்து காங்கிரஸ் தலைமை உத்தரவிட்டுள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் காங்கிரஸ் வலிமை இழந்து வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் தேசிய தலைவருமான சோனியாவுக்கு, ஒடிசாவைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏவும், காங்கிரஸ் நிர்வாகியுமான முகமது மொகிம் என்பவர் கடிதம் எழுதியிருந்தார். மேலும், 5 பக்கம் கொண்ட கடிதத்தில் காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் ராகுல் ஆகியோர் மீதும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தார்.

கட்சியின் தலைமைக்கும், அடிமட்ட தொண்டர்களுக்கும் இடையே மிகப்பெரிய இடைவேளை இருப்பதாகவும், 83 வயதான கார்கேவால், இளைய சமுதாயத்தினருடன் இணைந்து செயல்பட முடியவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இதன் காரணமாகவே, ஜோதிராதித்ய சிந்தியா, ஹிமாந்த பிஸ்வா சர்மா போன்ற இளம் தலைவர்கள் கட்சியை விட்டு வெளியேறி விட்டதாகவும், தொடர்ச்சியான தவறான முடிவுகள், மோசமான தலைமையும், பொறுப்பான பதவிகளை தகுதியற்றவர்களுக்கு வழங்கியதுதான் காங்கிரஸ் கட்சியின் தொடர் தோல்விக்கு காரணம் என்று வெளிப்படையாக குற்றம்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியில் இருந்து முகமது மொகிம் நீக்கப்படுவதாக அக்கட்சியின் தலைமை அறிவித்துள்ளது. கட்சி விரோத செயல்களில் ஈடுபட்டதாகக் கூறி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# உதட்டளவில் சமூகநீதி: அண்ணாமலை காட்டம்



உதட்டளவில் சமூகநீதி பேசி ஊரை ஏமாற்றுவதில் காட்டும் ஆர்வத்தை, பட்டியல் சமூக மக்கள், மாணவர்கள் முன்னேற்றத்தில் முதல்வர் காட்ட வேண்டும் என்று பாஜ முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

அவரது அறிக்கை: ஆதி திராவிடர் நலத்துறை சார்பில் தமிழகம் முழுவதும் நடத்தப்படும் மாணவர் விடுதிகளில், 100க்கும் மேற்பட்ட விடுதிகள் மூடப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கிறது. தமிழகத்தில் இருந்த 1,331 ஆதி திராவிடர் மாணவர் விடுதிகளில், தற்போது, 1,200 மாணவர் விடுதிகள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. 100க்கும் அதிகமான விடுதிகள் மூடப்பட்டுள்ளன.

சுமார் 98,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்ட இந்த விடுதிகளில், தற்போது, 65,000 மாணவர்கள் மட்டுமே தங்கி படித்து வருகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. சுத்தமான அறைகள், சுகாதாரமான குடிநீர், தரமான உணவு என்ற அடிப்படை வசதிகள் கூடச் செய்து கொடுக்கப்படாததால், மாணவர்கள், இந்த விடுதிகளில் சேர்ந்து படிக்க விருப்பம் காட்டுவதில்லை.

குறிப்பாக, மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு, தரமற்றதாக இருப்பதால், அது வீணாகி, கால்நடைகளுக்கு உணவாக விற்கப்படுவதை, ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தோம். பட்டியல் சமூக மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்க வேண்டும் என இந்த மாணவர் விடுதிகள் அமைக்கப்பட்ட நோக்கத்தையே, திமுக அரசு சிதைத்து விட்டது.

பட்டியல், பழங்குடி சமூக மக்கள் முன்னேற்றத்துக்காக, மத்திய அரசு வழங்கும் நிதியைச் செலவிடாமல், ஆண்டுதோறும் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறது திமுக அரசு. அந்த நிதியை, இந்த விடுதிகளை மேம்படுத்தப் பயன்படுத்துவதிலிருந்து, திமுக அரசை எது தடுக்கிறது? இந்த அழகில், சமூக நீதி விடுதி என்று பெயர் மாற்றம் செய்தோம் என, இரண்டு நாட்கள் விளம்பர நாடகம் நடத்தி, தனக்குத் தானே பெருமை பேசிக் கொண்டிருந்தார் முதல்வர் ஸ்டாலின்.

உதட்டளவில் சமூகநீதி பேசி ஊரை ஏமாற்றுவதில் காட்டும் ஆர்வத்தை, பட்டியல் சமூக மக்கள், மாணவர்கள் முன்னேற்றத்தில் முதல்வர் காட்ட வேண்டும், இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தமிழக தேர்தல் பாஜ பொறுப்பாளர்களாக மத்திய அமைச்சர்கள் 3 பேர் நியமனம்




தமிழக பாஜ தேர்தல் பொறுப்பாளராக மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், இணை பொறுப்பாளர்களாக அர்ஜுன் ராம் மேக்வால், முரளிதர் மோஹோல் ஆகிய 3 பேர் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

தமிழகத்தில் சட்டசபை பதவிக்காலம், மே மாதம் நிறைவடைய உள்ளதால், இம்மாநிலங்களில் ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடத்தப்பட உள்ளது. தேர்தலுக்கு இன்னும் மூன்றரை மாதங்களே உள்ளதால், தேர்தல் பணிகளில் அரசியல் கட்சிகள் களத்தில் இறங்கி உள்ளன. வேட்பாளர்களை தேர்வு செய்வதற்காக, தேர்தலில் போட்டியிட விரும்புவோரிடம் இருந்து, விருப்ப மனுக்கள் வாங்கும் பணியை துவக்கி உள்ளன.

இந்நிலையில் இன்று (டிச.,15) 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலையொட்டி 3 பேர் கொண்ட குழுவை பாஜ அமைத்து உள்ளது. பாஜக பொறுப்பாளர்களாக மத்திய அமைச்சர்கள் 3 பேர் களம் இறக்கப்பட்டு உள்ளனர். தேர்தல் பொறுப்பாளராக மத்திய அமைச்சர் பியூஷ் கோயலும், இணை பொறுப்பாளர்களாக அர்ஜ/ன் ராம் மேக்வால், முரளிதர் மோஹோல் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சராக பியூஷ் கோயல் பதவி வகித்து வருகிறார். இவர் மஹாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து ராஜ்யசபாவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். பாஜ.,வின் தேசியப் பொருளாளராகவும் பதவி வகித்துள்ளார்.

மத்திய சட்ட மற்றும் நீதித்துறை அமைச்சராக அர்ஜ/ன் ராம் மேக்வால் உள்ளார்.

இவர் ராஜஸ்தான் மாநிலத்தின் பிகானேர் லோக்சபா தொகுதி எம்பி ஆவார். 2013ம் ஆண்டில் சிறந்த பார்லிமென்ட் உறுப்பினருக்கான விருதைப் பெற்றார். 2019ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை கனரக தொழில்கள் மற்றும் பொது நிறுவனங்கள் துறை இணையமைச்சராக பதவி வகித்துள்ளார்.

மத்திய கூட்டுறவு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சராக முரளிதர் மொஹோல் பதவி வகித்து வருகிறார். பாஜவை சேர்ந்த இவர் கடந்த 2024ம் ஆண்டு லோக்சபா தேர்தலில் புனே லோக்சபா தொகுதியில் முதல்முறையாக வெற்றி பெற்று எம்பி ஆனார். முதல்முறையாக எம்பி.,யாக தேர்வு செய்யப்பட்டாலும் மத்திய இணை அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் புனேவின் மேயராகப் பணியாற்றி உள்ளார். (ஐ)

# தமிழக அரசின் அலட்சியத்தால் திருச்செந்துார் கோயிலுக்கு ஆபத்து: விஸ்வ ஹிந்து பரிஷத் குற்றச்சாட்டு



''தமிழக அரசின் செயல்பாடுகளாலும், அலட்சியத்தாலும் திருச்செந்துார் சுப்பிரமணியசுவாமி கோயில் கடல் அரிப்புக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது,'' என, மதுரையில் விஸ்வ ஹிந்து பரிஷத் மாநில இணை பொதுச் செயலாளர் சந்திரசேகரன் குற்றம்சாட்டினார்.

அவர் மேலும் கூறியதாவது: தி.மு.க., அரசு தொடர்ந்து அலட்சியம் காட்டுவதால் கோயில்களில் பல்வேறு பிரச்னைகள் எழுந்து வருகின்றன. திருச்செந்துார் கடற்கரையை ஒட்டி சுப்பிரமணியசுவாமி கோயில் அமைந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்பு கோயிலில் இருந்து சில கி.மீ., துாரத்தில் கடலுக்குள் அமைக்கப்பட்ட துாண்டில் வளைவு காரணமாக கடல் நீரோட்டத்தில் மாறுபாடு ஏற்பட்டு கோயில் அருகே கடல் அரிப்பு தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது.

இந்நிலை நீடித்தால் கோயிலுக்கு பாதுகாப்பில்லை. பக்தர்கள் கடலில் இறங்கி புனித நீராட முடியாத நிலை ஏற்படும். எனவே தமிழக அரசு உடனடியாக கடலுக்குள் அமைக்கப்பட்ட துாண்டில் வளைவை மாற்றி அமைக்க வேண்டும். கோயிலை காப்பாற்றிடவும், பாதுகாக்கவும் தமிழக அரசு சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். துாண்டில் வளைவை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். தவறினால் அரசை கண்டித்து போராட்டத்தில் ஈடுபடுவோம். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# கர்ப்பக்காலத்தில் கட்டாயம் சாப்பிட வேண்டிய உணவுகள் என்ன?



"நாங்கள் உணவியல் நிபுணர்கள் மூவர் இணைந்து, ஆன்லைனில் ஆலோசனைகள் தருகிறோம். குழந்தையின்மை, தைராய்டு, பிசிஓடி பிர்ச்னை உள்ளவர்கள், தாய்மையடைந்த மகளிர் எனப் பலருக்கும் ஆலோசனைத் தகிறோம். ஆரம்பத்தில் ஆன்லைனில் மட்டும்தான் ஆலோசனைகள் கொடுத்தோம். தற்போது, வார இறுதி நாள்களில் நேரடியாக ஆலோசனைத் தருகிறோம்."

### குழந்தையின்மைப் பிரச்னைக்கு உணவுப் புழக்கங்களும் காரணமாக இருக்கிறதா?

"இன்றைய வாழ்க்கைமுறை, உடற்பயிற்சியின்மை மட்டுமல்லாமல் உணவுப் பழக்கங்களும் இதற்கு முக்கியக் காரணம். உணவின் தரமும் இன்றைக்குக் குறைந்துவிட்டது. பெண்கள் வேலைக்குச் செல்ல ஆரம்பித்ததும், உணவிற்குக்கொடுக்கப்படும் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. 'எதையாவது சாப்பிட்டுவிட்டு, வேலைக்குப் போகவேண்டும்' என்ற மனநிலையில் ஓடுகிறார்கள். உறங்கும் நேரமும் மிகவும் குறைந்துவிட்டது. கொரோனாவிற்குப் பிறகு, வீட்டிலிருந்து வேலைசெய்யும் நிலை வந்த பின்னர், பலரும் இரவு 12 மணிக்கு மேல்தான் தூங்குகிறார்கள். இது, நிச்சயம் ஹார்மோன்களை பாதிக்கும்".



### குழந்தையின்மைக் குறைபாட்டை 'டயட் பிளான்'கள் மூலமாகச் சரிசெய்திருக்கிறீர்களா?

"நிறையவே சரிசெய்துள்ளேன். 'செயற்கை முறைக் கருத்தரிப்பு' (ஐஏகு) முயற்சித்து தோல்வியடைந்தவர்கள் கூட, எங்களிடம் ஆலோசனைப் பெற வந்துள்ளார்கள். நாங்கள் அறிவுறுத்தியபடி உணவுப்பழக்கங்களை மாற்றிக்கொண்டு, கருத்தரித்திருக்கிறார்கள்."



### இளவயதில் வரக்கூடிய சர்க்கரை நோய்க்கும் உணவுக்கும் தொடர்பிருக்கிறதா?

ஆமாம்! முன்பெல்லாம் 40 வயதிற்கு மேல்தான் பலரையும் 'சர்க்கரை நோய் பாதிக்கும். ஆனால், தற் போதைய உணவுப் பழக்கவழக்கத்தால் 40 வயதிற் குள்ளாகவே 'சர்க்கரை நோய்க்கான அறிகுறிகள் உள்ளன"

### என்ன மாதிரியான ஆரம்ப அறிகுறிகள் தென்படும்? அதை எப்படிக் கண்டறிவது?

'HbA1c' என்கிற பரிசோதனையின் மூலமாக 3 மாதங்களுக்கு சராசரியான சர்க்கரை அளவைக் கண்டறியலாம். அதன்படி, சர்க்கரை அளவு 5.7-க்கு மேலே சென்றால், அதைச் சர்க்கரை நோயின் முந்தைய அறிகுறியாகக் கொள்ளலாம். தவிர, இனிப்பு சாப்பிட வேண்டும் என்ற ஏக்கம் அதிகமிருக்கும். கழுத்துப் பகுதியில் கருமைப் படர்ந்திருக்கும். சிலருக்கு அடிவயிற்றில் அதிகமாக சதை சேரும்".

### உடற்பருமனைக் குறைக்க, உங்களுடைய 'டயட் பிளான்' என்ன?

"ஒவ்வொரு வாரத்திற்கும் தனித் தனியாக 'டயட் பிளான்' தருவோம். சத்துக்குறைபாடுகள் இருந்தால், அதனைச் சரிசெய்யும் வகையில் உணவுகளைப் பரிந்துரைப்போம். 3 முதல் 6 மாதங்களிலேயே நல்ல மாற்றம் தெரியும்".

### கர்ப்பக்காலத்தில் பெண்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய உணவுகள் எவை?

'ராகி, சிறுதானியங்களில் செய்த உணவுகள் எடுத்துக்கொள்ளலாம். தினசரி உணவில் புரோட்டீன் சத்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். கொண்டைக்கடலை, பச்சைப்பயறு, ராஜ்மா சேர்க்கலாம். நிறைய காய்கறிகள் சாப்பிடுவது பலன் தரும். முருங்கைக்கீரை சூட், கீரைக் கூட்டுகள், நார்ச்சத்து நிறைந்த பழங்கள் எடுத்துக்கொள்ளலாம். முக்கியமாக ரெடிமேட் உணவுகளைத் தவிர்த்து வீட்டில் சமைக்கப்படும் உணவுகளைச் சாப்பிடுவது நல்லது. கடைசி 3 மாதங்களில் மோர், இளநீர் நிறைய உட்கொள்வதன் மூலமாக உடலில் நீர்ச்சத்து குறையாமல் பாதுகாக்கமுடியும்.

### உணவு விஷயத்தில் குழந்தைகள், 40 வயது பெண்களுக்கு தங்களுடைய அறிவுரை?

"இப்போதெல்லாம் குழந்தைகளும்கூட 'உடற்பருமனபிரச்னையால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். 'ரோல் மாடல் பேரன்டிங்' என்று சொல்வோம். அதாவது. குழந்தைகள் என்ன சாப்பிட வேண்டும் என்பதற்கு முதலில் பெற்றோரே முன்மாதிரியாக இருக்க வேண்டும். 'ஆலு சப்பாத்தி' போல காய்கறிகளை 'ஸ்டஃப்' செய்து தரலாம். மஞ்சள், பீட்ரூட் போன்ற இயற்கை நிறங்கள் சேர்த்து, வண்ணமயமாக வெவ்வேறு வடிவங்களில் காய்கறிகளில் சமைத்துத் தரலாம். பெரியவர்களுக்கு வைட்டமின் 'டி' மற்றும் கால்சியம் குறைபாடு அதிகமுள்ளது.

சூரிய வெளிச்சம் நம் உடலில் படாததால்தான் வைட்டமின் 'டி' குறைபாடு ஏற்படுகிறது. இதற்கு மருத்துவரின் ஆலோசனைப்படி சப்ளிமென்ட் எடுத்துக்கொள்ளலாம். நடைப்பயிற்சி செய்வதோடு, ப்ரோக்கோலி, சோயாபீன்ஸ், பனீர், மீன் உணவுகள் எடுத்துக்கொள்வது நல்லது. தேவையான அளவு தண்ணீர் குடிப்பது அவசியம். 40 வயதில் சாப்பிடுவதுதான் 60 வயதில் பிரதிபலிக்கும் என்பதை மறக்காதீர்கள்".

### வயது வித்தியாசமின்றி பலரும் 'செரிமானப் பிரச்னை'யால் அவதிப்படுகிறார்கள். இதற்கு என்னதான் தீர்வு?

தொடர்ந்து உட்கார்ந்து வேலை செய்வது. வாழ்க்கை முறை, நேரம் தவறிய உணவுப் பழக்கங்களால் ஜீரணம் ஆகாதபோது தான் 'யுஉனைவைல' ஏற்படுகிறது. காரம் எடுத்துக்கொள்வது. மைதா, பால் ஆகியவை சிலருக்கு ஒத்துக் கொள்ளாது. எனவே ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவை அவர்கள் ஒதுக்கவேண்டும். ஓமம். சோம்பு, சீரகம் ஆகியவற்றைப் பொடித்து, வெந்நீருடன் ஒரு ஸ்பூன் கலந்து பருகலாம்".

# மொராக்கோவை புரட்டிப்போட்ட கனமழை வெள்ளத்தில் சிக்கி 21 பேர் பரிதாப உயிரிழப்பு



மொராக்கோவில் கடந்த 7 ஆண்டுகளாக மழையின் வறட்சி நிலவி வருகிறது. இந்த சூழலில், கடந்த சில தினங்களாக அந்நாட்டில் கனமழை மற்றும் அதிக பனிப்பொழிவு நிலவி வருகிறது. இந்த நிலையில், அட்லாண்டிக் கடற்கரை மாகாணமான சபியில் பேய் மழை பெய்தது. சுமார் ஒரு மணிநேரம் பெய்த கனமழையால் தாழ்வான இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

மக்களின் வீடுகள் மற்றும் கடைகளை வெள்ளம் சூழ்ந்தன. வாகனங்கள் அடித்து செல்லப்பட்டன. சில பகுதிகளில் முக்கிய சாலைகள் துண்டிக்கப்பட்டன. இதனால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வெள்ளத்தில் சிக்கி பொதுமக்கள் 21 பேர் உயிரிழந்ததாக மொராக்கோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், 30க்கும மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மீட்பு பணிகள் தொடர்ந்து நடந்து வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)




## பிரபல ஹாலிவுட் இயக்குநர் ராப் ரெய்னர், அவரது மனைவி கத்தியால் குத்திக்கொலை

லாஸ் ஏஞ்சலஸில் பிரபல ஹாலிவுட் இயக்குநரும், தயாரிப்பாளருமான ராப் ரெய்னர் மற்றும் அவரது மனைவி கத்தியால் குத்தப்பட்டு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

லாஸ் ஏஞ்சலஸில் உள்ள பிரெண்ட்வுட் வீட்டில் 78 வயது மற்றும் 68 வயதுடைய தம்பதி கத்தியால் குத்தப்பட்டு உயிரிழந்ததாக நேற்று போலீசார் தகவல் தெரிவித்தனர். உயிரிழந்த நபர்கள் குறித்து ஆரம்பத்தில் விபரம் வெளியாகாத நிலையில், பின்னர் அது ஹாலிவுட் இயக்குநரும், தயாரிப்பாளருமான ராப் ரெய்னர் மற்றும் அவரது மனைவி மிக்கேல் என்பது உறுதி செய்யப்பட்டது.

உடலில் பல இடங்களில் கத்தியால் குத்தப்பட்ட காயங்கள் இருந்ததாக போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவம் ஹாலிவுட் திரையுலகினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. மேலும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரித்து வருகின்றனர்.

1971ல் நடிகராக திரையுலக வாழ்க்கையை தொடங்கிய அவர் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளராகவும் ஜொலித்தார். திஸ் இஸ் ஸ்பைனல் டேப், தி பிரின்சஸ் பிரைட் உள்ளிட்ட பல்வேறு படங்களை இயக்கியுள்ளார். சிறந்த இயக்குநருக்கான கோல்டப் குளோப் விருதை 4 முறை வென்றுள்ளார். (ஐ)

## நேட்டோவில் இணையும் முயற்சியை கைவிட தயார் இப்போது சொல்கிறார் உக்ரைன் அதிபர்



மேற்கத்திய நாடுகளிடமிருந்து உறுதியானபாதுகாப்பு உத்தரவாதங்களை பெற்றால், நேட்டோவில் இணையும் முயற்சியை கைவிட தயாராக இருக்கிறோம்என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துஉள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் தொடர்ந்து நீடித்து வருகிறது. இரு நாடுகளுக்கு இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்த அமெரிக்கா தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. ஆனால் தீர்வு இல்லாத நிலை தொடர்ந்து நீடிக்கிறது. இந்தசூழலில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அந்நாட்டு செய்தி சேனலுக்கு அளித்த பேட்டி:

ஆரம்பத்தில் இருந்தே, உக்ரைனின் விருப்பம் நேட்டோவில் சேருவதாக இருந்தது் இவை உண்மையான பாதுகாப்பு உத்தரவாதங்கள். அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த சில கூட்டாளிகள் இந்த முடிவை ஆதரிக்கவில்லை.

மாற்று ஏற்பாடுகள் இன்னும் வலுவான பாதுகாப்பை வழங்க முடியும்.

இன்று, உக்ரைனுக்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு உத்தரவாதங்கள் ரஷ்ய படையெடுப்பைத் தடுக்க முடியும்.

அமைதியையும், ரஷ்யா மற்றொரு தாக்குதலை நடத்தாது என்பதற்கான உறுதியானஉத்தரவாதங்களையும்உக்ரைன் விரும்புகிறது. உக்ரைன் நகரங்கள் மற்றும் முக்கியமான உள்கட்டமைப்புகள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள்மூலம்ரஷ்யா வேண்டுமென்றே மோதலை நீடிக்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவில்ஏற்பட்ட மிக மோசமான போர் இதுவாகும். ரஷ்யாவிடம் உக்ரைன் எந்த பிராந்தியத்தையும் விட்டுக்கொடுக்காது. இவ்வாறு ஜெலன்ஸ்கி கூறினார். (ஐ)

## பிரேசிலில் வெடித்தது போராட்டம் முன்னாள் அதிபருக்கு ஆதரவான மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு

முன்னாள் அதிபர் போல்சனாரோவுக்கு விதிக்கப்பட்ட 27 ஆண்டு சிறை தண்டனையை குறைக்கும் மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரேசிலில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பிரேசிலில் கடந்த 2022ம் ஆண்டு நடந்த தேர்தலில், அப்போதைய அதிபராக இருந்த போல்சனாரோ அதிர்ச்சி தோல்வியடைந்தார். தேர்தலில் நடந்த முறைகேடு தான் தன்னுடைய தோல்விக்கு காரணம் எனக் குற்றம்சாட்டிய போல்சனாரோ, புதிய அரசு அமைவதை தடுக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.



இதையடுத்து, தேர்தல் முடிவுகளை மாற்ற முயற்சித்தல், ஆட்சியை கவிழ்க்க முயன்றது உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் போல்சனாரோ மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து, வீட்டுக் காவலில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போல்சனாரோ, அர்ஜென்டினாவுக்கு தப்பியோட முயற்சித்தார். ஆனால், தேர்தல் முடிவுகளை மாற்ற முயற்சித்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்கில், போல்சனாரோவுக்கு 27 ஆண்டுகள் மற்றும் மூன்று மாதங்கள் சிறை தண்டனை விதித்து அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனிடையே, போல்சனாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை காலத்தை குறைக்கும் மசோதா பிரேசில் பார்லியில் கொண்டு வரப்பட்டது. கீழ் சபையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா, மேல் சபையின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பு கிளம்பியது. தலைநகர் பிரேசிலியா உள்பட ப்ளோரியானோபொலிஸ், சல்வடோர், ரெசிப் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டம் நடத்தினர்.

'மன்னிப்பு இல்லை' என்று கோஷம் எழுப்பினர். மேலும், கீழ் சபையின் சபாநாயகர் ஹுகோ மோட்டோவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவர் வெளியேற வேண்டும் என்று முழக்கமிட்டனர். இதனால், பிரேசிலின் முக்கிய நகரங்களில் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது. (ஐ)

## ஆசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முயற்சியாண்மைகள் மற்றும் தொழில்முனைவோரை தொழில்ரீதியாக கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் டொலர் தொகையை நன்கொடையாக வழங்கியமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய பேரிடர் நிலையைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெளிவுபடுத்தினார்.

இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கை மீண்டும் எழுந்து நிற்பதற்குத் தேவையான ஆதரவுகளைப் பெற்றுத் தருமாறும் சஜித் கோரிக்கை விடுத்தார்.

## பாடசாலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளிப்பதில் அல்லது அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் மக்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின்,1904 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மண்சரிவு அல்லது அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தவர்களை குடியமர்த்துவது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

"இவர்களுக்கு வழங்க முடியுமான பொருத்தமான அரச காணிகளின் தகவல்களை வழங்குமாறு அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் தரவுகளின் அடிப்படையில், பகுதி அளவில் சேதமடைந்த வீடுகளில் ஆபத்து இல்லை எனக் கண்டறியப்பட்டால், அவர்களை மீண்டும் அந்த வீடுகளிலேயே குடியேற்ற முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

வீடுகளை முழுமையாக இழந்தவர்களைக் குடியமர்த்துவதே தற்போதுள்ள பிரதான சவாலாகும். இதற்காக அரசு முன்னெடுத்துள்ள விசேட வேலைத்திட்டத்தை விரைவாகச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது." - என்றார்.

## ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற அமர்வின்போது இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, 500 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கப்படும் எனக் கூறியிருந்தார்.

## யாழ்.,விமான நிலைய முனையத்துக்கு அடிக்கல்





யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கான பயணிகள் முனைய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் திங்கட்கிழமை (15) மதியம் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாணம் விமான நிலையத் தலைவர் சமன் அமரசிங்க, விமான நிலைய இணை முகாமைத்துவ தலைவர் சஞ்சீவ அமரபதி, இலங்கை விமான நிலைய ஆணைக்குழுவின் பிரதித் தலைவர், பொறியியலாளர் ஆகியோரால் சர்வமத வழிபாடுகளோடு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதேவேளை கட்டம் 02 க்கான வேலைகள் ஜனவரி 2026 இல் திட்டமிடப்பட்டுள்ளது .

இரண்டு கட்டங்களுக்கும் எதிர்பார்க்கப்படும் மொத்த முதலீடு ஏறத்தாள 700 ரூபாய் மில்லியன் ஆகும் என சிவில் விமானப் போக்குவரத்து இணை அமைச்சர் ஜனிதா ருவான் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.




## புறாத்தீவு தேசிய பூங்கா மூடப்பட்டது

கடல் கொந்தளிப்பு மற்றும் மோசமான வானிலை காரணமாக நிலாவெலி புறா தீவு தேசிய பூங்கா சுற்றுலாப் பயணிகளுக்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும், தீவுக்குள் நுழைவதற்கான டிக்கெட்டுகளை வழங்குவதும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

கடல் கொந்தளிப்பு மற்றும் மோசமான வானிலை எப்போது அதிகரிக்கும் என்பதை குறிப்பிட முடியாது, மேலும் ஆண்டின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படும் இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பூங்கா காப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோத அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டவர்கள் கைது!

புதுக்குடியிருப்பு - தேவிபுரம் பிரதேசத்தில் காணியொன்றில் சட்டவிரோத அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்த நபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அநுராதபுரம், இனாமலுவ, மொரகொட மற்றும் கலேவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 35 முதல் 48 வயதுக்கு இடைப்பட்ட நான்கு ஆண் சந்தேக நபர்களும், மடாட்டுகம மற்றும் தேவிபுரம் பிரதேசங்களைச் சேர்ந்த 36 மற்றும் 45 வயதுடைய இரண்டு பெண் சந்தேக நபர்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பருவகால சீட்டை பயன்படுத்தும் பாடசாலை மாணவர்களுக்கான விசேட அறிவித்தல்!

பருவகால சீட்டை பயன்படுத்தும் பாடசாலை மாணவர்களுக்கு அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த மாதமும் நவம்பர் மாதத்திற்கான பருவகால சீட்டை பயன்படுத்தி இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளில் பயணம் செய்ய முடியும் என என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

இதற்கிடையில், னர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நிதியை திரட்டும் நோக்கில், ஜனவரி மாதத்தில் ஒரு நாள் சம்பளத்தை நன்கொடையாக வழங்க ஆசிரியர்கள் தயாராக இருப்பதாகவும் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விபத்துக்குள்ளான எம்.பி அஷோக ரன்வலவின் மருத்துவ அறிக்கை கிடைக்கவில்லை- பொலிஸ் ஊடகப் பேச்சாளர்!

விபத்துக்குள்ளான நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக ரன்வலவின் மருத்துவ அறிக்கை இதுவரை பொலிஸாருக்குக் கிடைக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப். யூ. வூட்லர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ அறிக்கை கிடைத்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக ரன்வல தொடர்பில் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆம் திகதி முன்னாள் சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அசோக ரன்வல செலுத்திய ஜீப் வண்டி, மற்றுமொரு காருடன் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது.

விபத்தின் போது காரில் பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட 25 வயதுடைய பெண், அவரது 6 மாதக் குழந்தை மற்றும் 55 வயதுடைய பாட்டி ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தநிலையில் ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்தியமை மற்றும் விபத்தைத் தவிர்க்காமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல கைது செய்யப்பட்டு பிணையில்விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பணம் பறிக்கும் மோசடி வலை! பொலிஸார் பொதுமக்களுக்கு விடுத்துள்ள அவசர எச்சரிக்கை!



கொழும்பு, டிசெ.15

பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வங்கி ஊழியர்களாக நடித்துப் பணம் பறிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட மோசடி குழுக்கள் குறித்து இலங்கை மக்களுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மோசடிக்காரர்கள், இலங்கை பொலிஸ், குற்றப் புலனாய்வுப் பிரிவு, நிதி மோசடி விசாரணைப் பிரிவு (FCID) அதிகாரிகள் என்றோ அல்லது வங்கிப் பிரதிநிதிகள் என்றோ தவறாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு, பொதுமக்களை அச்சுறுத்தி ஏமாற்ற முயற்சிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மோசடி குழு பணமோசடி அல்லது நிதி குற்றங்கள் போன்ற பாரதூரமான குற்றங்களுக்காக நீங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளீர்கள் என்றும், உடனடி கைது அல்லது சட்ட நடவடிக்கை தொடரும் என்றும் கூறி பயத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்டவரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது அண்மைய பரிவர்த்தனைகள் போன்ற பகுதியளவு தனிப்பட்ட விபரங்களை அடிக்கடி குறிப்பிடுவார்கள் எனவும் விசாரணை இரகசியமானது என்ற போர்வையில், குடும்ப உறுப்பினர்கள் உட்பட யாரிடமும் இந்த விடயத்தைப் பற்றிப் பேச வேண்டாம் என்று அறிவுறுத்துவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் விசாரணைச் சரிபார்ப்பு அல்லது தற்காலிக அரசாங்கக் கணக்கு போன்ற காரணங்களைக் கூறி, குறிப்பிட்ட கணக்குகளுக்குப் பணத்தை வைப்புச் செய்யுமாறு அழுத்தம் கொடுப்பார்கள். PIN- OTP கணக்கு இலக்கங்கள் போன்ற இரகசிய வங்கித் தகவல்களை வெளியிடக் கோருவார்கள்.

இந்தநிலையில் எந்தவொரு பொலிஸ் அதிகாரியோ அல்லது அரச நிறுவனமோ தொலைபேசியில் பணம், வங்கி விபரங்கள் அல்லது ரகசிய தனிப்பட்ட தகவல்களை ஒருபோதும் கோர மாட்டார்கள் என்று இலங்கை பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். இதுபோன்ற சந்தேகத்திற்கிடமான அழைப்புகளைப் பெறும் பொதுமக்கள் உடனடியாக அழைப்பைத் துண்டித்து, எந்தத் தகவலையும் பகிர்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அத்துடன் மோசடி அழைப்புகள், வட்ஸ்அப் தகவல்கள் அல்லது அழைப்புப் பதிவுகள் குறித்து உடனடியாக அருகிலுள்ள பொலிஸார் நிலையத்தில் முறைப்பாடளிக்குமாறு பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.12.2025 வெளியிடப்பெற்றது.